14.09.2023

அ.வ.எண்.2/2019

பேபிஸ்டெல்லா (D.W.1)

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

1. வாதி எனது சகோதரன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1-இன் படி 5 சென்ட் சொத்தானது எனது அப்பாவுக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 வாரிசு சான்றிதழ் என்றால் சரிதான். வா.சா.ஆ.3-இல் வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் எனது அப்பாவின் வாரிசுகள் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெறும் போது வாதிக்கு எத்தனை வயது இருந்திருக்கும் என்றால் சுமார் 17 முதல் 18 வயது இருக்கும் சரியாக தெரியாது. எனக்கு திருமணம் நடைபெறும் போது 4-ஆம் பிரதிவாதிக்கு எத்தனை வயது இருந்திருக்கும் என்றால் அப்போது 4-வது அல்லது 5-ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். ஆனால் 4-ஆம் பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் எனது திருமண செலவை அவர் செய்தார் என்று கூறியுள்ளார் என்று சொன்னால் அது பொய் ஆகும். இவ்வழக்கு தொடரப்படுவதற்கு முன்பு எத்தனை வருடங்களுக்கு முன்பு எனது அம்மாவிற்கு ஞாபக சக்தி இல்லாமல் போனது என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பாகும்.

2. எனது அம்மா படிக்கவில்லை மற்றும் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு பார்வையும் சரியாக தெரியாது என்றால் சரிதான். எனது அம்மா யாருக்காவது ஆவணம் எதுவும் ஏற்படுத்திக்கொடுத்தாரா என்றால் இல்லை. எனது அம்மா கைரேகை வைக்க வேண்டும் என்றால் நாங்கள் யாராவது அவரது விரலை பிடித்து கைரேகையை பதிவு செய்தால் தான் அவரது கைரேகையை வைக்க முடியும். எனது அம்மாவை 4-ஆம் பிரதிவாதி எத்தனை வருடங்களுக்கு முன்பு அடித்து வீட்டை விட்டு விரட்டினார் என்றால் வழக்கு தாக்கல் செய்த 4 வருடத்திற்கு பின்பு அடித்து விரட்டினார். எனது அம்மா தற்போது எங்கு உள்ளார் மற்றும் அவரை யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் அவர் தனியாக வாடகை வீட்டில் உள்ளார் அவரை நானும், 5-ஆம் பிரதிவாதியும் பராமரித்து வருகிறோம். வழக்கு பட்டிகை சொத்தில் வாதிக்குரிய பங்கை கொடுக்க எனக்கு ஆட்சேபனை எதுவும் உண்டா என்றால் இல்லை. எனது அப்பாவிற்கு உரிமைப்பட்ட சொத்தில் வழக்கு

தரப்பினர்களுக்குரிய பங்கை கொடுக்க எனக்கு ஆட்சேபனை எதுவும் உண்டா என்றால் இல்லை.

3. 4-ஆம் பிரதிவாதி எனது அம்மாவை அழைத்துக்கொண்டு பத்திரம் ஒன்று எழுதிக்கொண்டதாக கூறியுள்ளார் என்றால் அது பொய்யாகும். பட்டிகை சொத்தில் உள்ள வீட்டை யார் செலவு செய்து கட்டினார்கள் என்றால் நாங்கள் அனைவரும் செலவு செய்து கட்டினோம். மேற்படி கட்டிட வேலையை நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் பார்த்தோம்.